03.04.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.24/2021**

**வா.சா.4**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கைலாசமணி | | |
| **த/பெ** | அருணாச்சலம் | **மதம்** | |
| **கிராமம்,** | விழுப்புரம் | **தொழில்** | மேலாளர், இந்தியன் வங்கி விழுப்புரம் |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 54/2025 |
| **மாவட்டம்**; | விழுப்புரம் | **தேதி** | |

சாட்சி அழைப்பாணையின் பேரில் வரவழைக்கப்பட்டு இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் விழுப்புரம் இந்தியன் வங்கி கிளைக்கு வந்து சுமார் 9 மாதம் ஆகிறது. நான் எனது வங்கியில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இந்த வழக்கின் பிரதிவாதி பார்த்திபனுக்கு எனது வங்கியில் என்ன கணக்கு உள்ளது என்றால் Over Draft கணக்கு உள்ளது. இந்த கணக்கு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதியின் வங்கி கணக்கில் 21/01/2020 ந் தேதியில் ரூபாய் 10 லட்சம் கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளதா என்றால் வரவு வைக்கப்பட்டுள்ளது. அது எங்கிருந்து எங்கு வந்தது என்று எனக்கு தெரியவில்லை. அதே போல் 02/03/2020 ந் தேதியில் ரூபாய் 10 லட்சம் வரவு வைக்கப்பட்டுள்ளது. 26/06/2020 ந் தேதியில் ரூபாய் 8 லட்சம் வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த 3 காசோலைகளை சேர்த்தால் ரூபாய் 28 லட்சம் வாதி

கணக்கிலிருந்து தான் பிரதிவாதி கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 5 ஆவணத்தில் 21/01/2020 ந் தேதியில் காசோலை எண். 031960 காசோலையிலிருந்து அந்த ரூபாய் 10 லட்சத்திற்கான காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் 02/03/2020 ந் தேதியில் SSK Construction நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட காசோலை எண். 031961 மூலம் ரூபாய் 10 லட்சம் வங்கியில் டெபிட் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 26/06/2020 ந் தேதியில் அதே போல் SSK Construction நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட காசோலை எண். 031981 மூலம் ரூபாய் 8 லட்சம் டெபிட் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கணக்கில் தொகை பார்த்திபனுக்கு செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் எனது வங்கி பார்த்திபன் என்பவரின் வங்கி கணக்கு பட்டியலை என்னுடன் கொண்டு வந்துள்ளேன். அந்த வங்கி கணக்கு பேரேடு நகல் வா.சா.ஆ. 6 ஆகும்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் ஜீன் 2024 லிருந்து தான் விழுப்புரத்தில் பணி செய்து வருகிறேன். நான் கொண்டுவந்துள்ள கணக்கு பேரேடு நகல் பார்த்திபன் என்பவருடையது என்றால் சரிதான். நான் 01/01/2015 முதல் 31/12/2020 வரையிலான ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் கணக்கு பேரேடு நகலில் காசோலை எண்கள் இருக்குமா என்றால் டெபிட் செய்யும் போது இருக்கும். நான் கூறிய காசோலை எண்கள். 031960 மற்றும் 031961 ஆகிய இரண்டுமே தொடர்ச்சியான காசோலை எண்கள் என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள கணக்கு பேரேட்டு நகலில் காசோலை எண். 031962 உள்ளதா என்றால் இல்லை.

என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் காசோலை எண். 031962 ன் காசோலை புகைப்பட நகல் என்றால் சரிதான். ஆனால் அசல் ஆவணத்தை பார்த்தால் தான் கூற முடியும். அதில் ரூபாய் 8 லட்சம் என நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் SSK Construction காசோலை என்று உள்ளது என்றால் சரிதான். தேதி 30/03/2020 என உள்ளது என்றால் சரிதான். அது பார்த்திபன் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணமானது SSK Construction நிறுவனத்தின் கணக்கு பேரேட்டு நகல் என்றால் சரிதான். அதில் காசோலை எண்.031962 இருக்கிறதா என்றால் இல்லை.